# மேல் ஈடு கடன் பத்திரம்

**(Further Charge)**

201__ம் வருடம், மாதம் ம் நாள், __________________ என்ற விலாசத்தில் வசிக்கும் திரு._________ அவர்களின் குமாரர் சுமார் _________ வயதுள்ள திரு. _________ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) ஆகிய உங்களுக்கு

______________ என்ற விலாசத்தில் வசிக்கும் _________ அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு._________ ஆகிய நான் (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) என் மனப்பூர்வமான சம்மதத்துடன் எழுதிக் கொடுக்கும் மேல் ஈடு கடன் ஆவணம் என்னவென்றால்,

இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள _________ மாவட்டம், _______________ சொத்தானது நான் எனது சொந்த வருவாய் மற்றும் சேமிப்பைக்கொண்டு _________ தேதியிட்ட ___________ சார்பதிவக 1 புத்தக ஆவண எண்._______/____ மூலம் கிரையம் பெற்று அதுமுதல் எந்தவிதமான வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல் சர்க்கார் வரி வகையறாக்கள் செலுத்திக்கொண்டு என்னுடைய சொந்த அனுபவத்திலும் சுவாதீனத்திலும் சகல சார்வ சுதந்திர பாத்தியங்களுடனும் சகல உரிமைகளுடனும் ஆண்டு அனுபவித்து வருகையில், எனது அவசர குடும்ப செலவின் காரணமாக தங்களது பெயருக்கு ரூ.________க்கு ____% வட்டி கண்டு ____ மாத வாய்தாவுக்கு ______ தேதியில் தங்களுக்கு எழுதிக் கொடுத்து ஈடு அடமான ஆவணம் ___________ சார்பதிவகத்தில் 1 புத்தக ஆவண எண்.______/____ ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஈடு ஆவணத்தில் கண்ட ஷரத்துக்களின்படி நான் வட்டி விகிதத்தை தங்களுக்கு செலுத்தி வந்துள்ள நிலையில் மேற்படி ஈடு கடன் பத்திரத்தின் அசல் தொகையும் பின் வட்டியும் பிரத்தியேகமாய் இருக்க மீண்டும் இரண்டாவது தடவையாக அடியிற்கண்ட சொத்தையே ரூ.________க்கு தங்களுக்கு இதன் மூலம் மேலீடு செய்துக்கொடுத்து என்னுடைய குடும்ப செலவுக்கு தங்களிடமிருந்து மேற்சொன்ன ரூ._______ஐ பெற்றுக்கொண்டு என் பற்றாகியது.

எனவே இன்று முதல் இந்த ரூ.____________ (ரூபாய் _____)க்கு மாதம் வட்டியாக ரூபாய் __________வீதம் கூடிய வட்டியை பிரதி மாதம் ஆங்கில தேதி _____க்குள் தங்களிடமோ தங்களின் வாரிசுகளிடமோ / அதிகாரம் பெற்றவர்களிடமோ ______ மாதக் கெடுவிற்க்குள் தவறாமல் செலுத்திவிட ஒப்புக் கொள்கிறேன்.

மேற்படி அசல் தொகையையும், வட்டியையும் சேர்த்து நான் செலுத்த தவறினால் தாங்கள் என்மீதும் சொத்து விவரத்தில் கண்ட சொத்தின் மீதும் தக்க நடவடிக்கை எடுத்து கொள்ளவும் மற்றும் Transfer of Property Act Sec.69 மற்றும் 69A-படியும் நடவடிக்கை எடுத்து அதற்கான செலவுகளுடன் சேர்த்து மொத்த தொகையையும் நீங்கள் என்னிடமிருந்து வசூல் செய்துக் கொள்ளவும் நான் மனப்பூர்வமாய் சம்மதிக்கின்றேன்.

இந்த ஆவணம் மூலம் சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்படவில்லை.

## சொத்து விவரம்

இந்தப்படிக்கு நான் என் மனப்பூர்வமான சம்மத்துடன் கீழ்கண்ட சாட்சிகள் முன்னிலையில் சம்மதித்து எழுதிக் கொடுத்த மேலீடு கடன் பத்திரம்.

சாட்சிகள்

1

2